RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை மலர்-5 இதழ்- 143 மே.31 2026 ஞாயிற்றுக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ. 5

# தமிழகத்தில் நடக்கும் குதிரை பேரத்தை தடுத்து நிறுத்த கோரி ஆளுநரிடம் அதிமுக மனு

சென்னை: மே.31-

"அதிமுக எம்எல்ஏக்களை விலைபேசும் தவெகவின் நடவடிக்கையை ஆளுநர் தடுத்து நிறுத்த வேண்டும்" என அதிமுக எம்எல்ஏ அக்ரி கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அதிமுக எம்எல்ஏக்கள் மரகதம் குமரவேல், ஜெயக்குமார் , சத்யபாமா, இசக்கி சுப்பையா ஆகியோர் தங்களது பதவியை ராஜினாமா செய்துவிட்டு, தவெகவில் இணைந்துவிட்டனர். இதையடுத்து அதிமுகவில் கடும் புகைச்சல் ஏற்பட்டுள்ளது. மேலும், தவெக குதிரை பேரத்தில் ஈடுபட்டுள்ளதாக எதிர்க்கட்சி தலைவர்கள் கடுமையாக குற்றம் சாட்டி வருகின்றனர்.



இந்நிலையில், இது குறித்து அக்ரி கிருஷ்ணமூர்த்தி செய்தியாளர்களிடம் பேசும்போது, "குதிரை பேரத்தின் மூலமாக அதிமுக எம்எல்ஏக்களை விலைபேசும் தவெகவின் நடவடிக்கையை தடுத்த நிறுத்த வேண்டும் என அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ், ஆளுநருக்கு கொடுத்த புகார் மனுவை நாங்கள் கொடுத்துள்ளோம்.

இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளோம். தலைமை செயலகத்தையே தவெக கட்சி அலுவலகமாக மாற்றிவிட்டனர்" என்று கூறினார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட அதிமுக அறிக்கையில், "தமிழகத்தில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற குதிரை பேரத்தை தடுத்து நிறுத்துவதற்கு, தமிழக ஆளுநர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, அதிமுக பொதுச் செயலாளரும், முன்னாள் முதல்வருமான எடப்பாடி பழனிசாமி கொடுத்த மனுவினை, இன்று அதிமுக விவசாயப் பிரிவுச் செயலாளரும், திருவண்ணாமலை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டமன்றக் குழு கொறடாவும், முன்னாள் அமைச்சருமான அக்ரி கிருஷ்ணமூர்த்தி, ம. தனபால், ஆகியோர், தமிழக ஆளுநரை நேரில் சந்தித்து வழங்கினார்கள்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.




■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ச. ஜோசப் விஜய் அவர்களை தலைமைச் செயலகத்தில், மாநில தலைமை தகவல் ஆணையர் திரு. முகமது ஷகில் அக்தர், இ.கா.ப., (ஓய்வு), மாநில தகவல் ஆணையர்கள் திரு. அபய் குமார் சிங், இ.கா.ப., (ஓய்வு), திரு. பி. தாமரைக்கண்ணன், இ.கா.ப., (ஓய்வு), திரு. ஆர். பிரியகுமார், திரு. கே. திருமலைமுத்து, திரு.வி.பி. இளம்பரிதி, திரு. எம். நடேசன், திரு. ஏ. விஜயராம் ஆகியோர் சந்தித்தார்கள்.


# அஜித் தாயார் மறைவு: முதல்வர் விஜய், அரசியல் தலைவர்கள் இரங்கல்

சென்னை: மே.31-

நடிகர் அஜித் குமாரின் தாயார் மோகினி மணி (வயது 85) உடல்நலக்குறைவு மற்றும் வயது மூப்பு காரணமாக சென்னையில் இன்று 30.05.2026 காலை உயிரிழந்தார்.

இந்நிலையில், நடிகர் அஜித் குமாரின் தாயார் காலமானதைத் தொடர்ந்து, முதல்வர் விஜய், திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.





முதல்வர் விஜய்: அருமை நண்பர் அஜித் குமார் தாயார் மோகினி அம்மையார் மறைவுச் செய்தி கேட்டு மிகுந்த வேதனை அடைந்தேன். அவரது ஆன்மா இறைவன் திருவடியில் இளைப்பாற பிரார்த்திக்கிறேன். வாழ்வில் அனைத்து நிலைகளிலும் அரணாக இருந்து அரவணைத்த தாயாரை இழந்து வாடும் நண்பர் அஜித் குமாருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மு.க. ஸ்டாலின்: அன்புச் சகோதரர் அஜித்குமாரின் தாயார் மோகினி மணி மறைந்த செய்தியறிந்து வேதனையடைந்தேன். உயிர்கொடுத்து, தான் உயரங்கள் தொட்டதைப் பார்த்து மகிழ்ச்சி கொண்ட அன்னையினை இழந்து வாடும் அஜித்குமாரை தேற்ற என்னிடம் வார்த்தைகள் இல்லை. அன்னையுடனான அழகிய தருணங்களே இந்தத் துயரில் அவர் மீளத் துணைநிற்க விழைகிறேன். அஜித்குமார் மற்றும் அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலும் ஆறுதலும்.

இபிஎஸ்: திரையுலகில் முன்னணி நட்சத்திர நடிகரும் , கார் பந்தய வீரருமான சகோதரர் அஜித் குமாரின் தாயார் மோகினி மணி காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த துயருற்றேன். பாசமிகு தாயாரை இழந்து வாடும் சகோதரர் அஜித்குமார், அவரது குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மு.வீரபாண்டியன்: நடிகர் அஜித் குமாரின் தாயார் இயற்கை எய்திய செய்தி மிகுந்த வருத்தத்தையும், துயரத்தையும் தருகிறது. அவரது மறைவுச் செய்தி திரைத்துறையினரையும், ரசிகர்களையும் பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

அவரைப் பிரிந்து வாடும் நடிகர் அஜித் குமார், அவரது வாழ்க்கை இணையர் நடிகர் ஷாலினி மற்றும் குடும்பத்தினர் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்புமணி: தமிழ்த் திரைப்பட நடிகர் அஜித் குமார் தாயார் மோகினி மணி அவர்கள் உடல்நலக் குறைவு காரணமாக காலமானார் என்ற செய்தியறிந்து அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன். தாய் மீது நடிகர் அஜித்குமார் கொண்டிருந்த அன்பை நான் அறிவேன். உலகில் எவராலும் தாங்கிக் கொள்ள முடியாத இழப்பு என்பது தாயாரின் மறைவு தான்.

அன்னையை இழந்து வாடும் நடிகர் அஜித்குமார் உள்ளிட்ட குடும்பத்தினர், நண்பர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

# "அதிமுகவில் பிரிவை ஏற்படுத்த நான் ஒருபோதும் எண்ணியதில்லை" லீமா ரோஸ் விளக்கம்

சென்னை: மே.31-

"அதிமுகவில் பிரிவுகள் ஏற்படுத்த நான் ஒருபோதும் எண்ணியதில்லை. என் மீது களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு சில வாடகை பேச்சாளர்களால் பரப்பப்பட்ட வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது தலைவர்களின் இணைப்பு" என அதிமுக எம்எல்ஏ லீமா ரோஸ் மார்ட்டின் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'அதிமுகவின் முன்னணி தலைவர்களிடையே இருந்த கருத்து வேறுபாடுகள் களைந்து கட்சி ஒன்றுபட்டது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. சமீப காலமாக என்னை வைத்து சில வாடகை பேச்சாளர்கள் எந்த வித அடிப்படை ஆதாரமும் இன்றி சொல்லிய கட்டுக்கதைகள் பொய்த்துப் போயின.

எம்.ஜி.ஆரால் உருவாக்கப்பட்டு, ஜெயலலிதாவால் செழுமைப்படுத்தப்பட்ட பேரியக்கத்தில் பிரிவுகள் ஏற்படுத்த நான் ஒருபோதும் எண்ணியதில்லை. என் மீது களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு சில வாடகை பேச்சாளர்களால் பரப்பப்பட்ட வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது இந்த இணைப்பு.

பல கோடி மக்களின் நம்பிக்கையாக திகழும் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட்டு லால்குடி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டது என் வாழ்நாளின் பெரும் அங்கீகாரமாக கருதுகிறேன்.

எனது தொகுதி மக்களுக்கு நலத்திட்டங்களை வழங்கிடவும், தொகுதி வளர்ச்சிக்கு உழைப்பதுமே என்னுடைய முதன்மை கடமையாக எண்ணுகிறேன். தமிழ்நாட்டில் மீண்டும் ஜெயலலிதாவின் நல்லாட்சி மலர்ந்திட எடப்பாடி பழனிசாமி தலைமையில் அயராது பாடுபடுவோம்' எனத் தெரிவித்துள்ளார்.

# "கோட்டூர்புரத்தில் போராடியவர்களை கைது செய்தது தவெக அரசின் சர்வாதிகாரப் போக்கு" : தினகரன்

சென்னை: மே.31-

'கோட்டூர்புரத்தில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் கட்டி முடிக்கப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பில் வீடுகளை ஒப்படைக்கக் கோரி போராடிய பயனாளிகளை காவல் துறையை ஏவி கைது செய்திருக்கும் தவெக அரசின் அடக்குமுறை கடும் கண்டனத்துக்குரியது' என அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'சென்னை கோட்டூர்புரத்தில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் கட்டி முடிக்கப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள வீடுகளை ஒப்படைக்கக் கோரி போராடிய பயனாளிகள் மீது காவல் துறையை ஏவி கைது செய்திருக்கும் தவெக அரசின் அடக்குமுறை கடும் கண்டனத்துக்குரியது.

தங்களின் உரிமைகளுக்காக போராடும் மக்களுக்கு பதில் சொல்ல வேண்டிய துறை சார்ந்த அமைச்சரும், சட்டப்பேரவை உறுப்பினரும் வராமல் காவல் துறையை பயன்படுத்தி, அவர்களை ஒடுக்க நினைப்பது சர்வாதிகாரப் போக்கே தவிர வேறு என்னவாக இருக்க முடியும்?

எனவே, பயனாளிகளுக்கான வீடுகள் விரைந்து ஒதுக்கீடு செய்யப்படுவதை நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியமும், தவெக அரசும் உறுதி செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

# கேரளாவில் சிக்கிய ஜெலட்டின் வெடிபொருள்: திருச்சி, விருதுநகரில் என்ஐஏ சோதனை

திருச்சி: மே.31-

கேரளாவில் கிடைத்த ஜெலட்டின் உள்ளிட்ட வெடிப்பொருட்களை தயாரித்த திருச்சி வெடிமருந்து தொழிற்சாலை உள்ளிட்ட இடங்களில் கொச்சினை சேர்ந்த என்ஐஏ அதிகாரிகள் தீவிர விசாரணை மேற்கொண்டனர்.

கேரளா மாநிலம் மலப்புரத்தில் கடந்த பிப்ரவரி மாதம் ஒரு லாரி நிறைய வெடி மருந்துகள் சிக்கின. அந்த லாரியில் இருந்த வெடி மருந்துகளை கைப்பற்றி கொச்சினை சேர்ந்த தேசிய புலனாய்வு முகமை (என்ஐஏ) அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.



அந்த விசாரணையில், அவை தமிழகத்தில் திருச்சி, விருதுநகர், கர்நாடக மாநிலத்தில் மிசாப்பூர் ஆகிய இடங்களில் உள்ள 3 வெடி மருந்து நிறுவனங்களில் தயாரிக்கப்பட்ட வெடி மருந்துகள் என்பதை கண்டறியப்பட்டது.

திருச்சி மாவட்டம் துறையூர் அருகே முருங்கப்பட்டியில் செயல்பட்டு வரும் வெற்றிவேல் எக்ஸ்ப்ளோசிவ் எனப்படும் தொழிற்சாலையில் கல்குவாரிகள் மற்றும் கிணறுகள் தோண்ட பயன்படுத்தப்படும் ஜெலட்டின் குச்சிகள் உள்ளிட்ட வெடிப்பொருட்கள் தயாரிக்கப்படுகிறது. இந்த தொழிற்சாலைக்கு கொச்சினை சேர்ந்த 5 என்ஐஏ அதிகாரிகள் காலை 6 மணிக்கு வருகை தந்தனர்.

தொழிற்சாலைக்குள் சென்ற அதிகாரிகள் வெடி மருந்துகள் தயாரிப்பு, விநியோகம் குறித்த பதிவேடுகளை தொடர்ந்து ஆய்வு செய்தனர். இவர்களின் பாதுகாப்புக்காக தமிழ்நாடு சிறப்பு அதிரடி காவல் படையினர் ஒரு பேருந்தில் வந்திருந்தனர். தொழிற்சாலையை சுற்றி அவர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

சோதனை காரணமாக, பத்திரிக்கையாளர்கள் உட்பட வெளியாட்களை தொழிற்சாலை செயல்படும் பகுதிக்குள் போலீஸார் அனுமதிக்கவில்லை.

கடந்த 2016ம் ஆண்டு இந்த தொழிற்சாலையில் ஏற்பட்ட பயங்கர வெடிவிபத்தில் பணியில் இருந்த 20க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உடல் சிதறி பலியானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோல, தமிழகத்தில் விருதுநகரில் உள்ள ஒரு வெடிமருந்து தொழிற்சாலை, கர்நாடக மாநிலம் மிசாப்பூரில் உள்ள வெடிமருந்து தொழிற்சாலை என மொத்தம் 3 தொழிற்சாலைகளிலும், ஜெலட்டின் உள்ளிட்ட வெடிப்பொருட்கள் சட்டவிரோதமாக விநியோகம் செய்யப்பட்டது குறித்து கொச்சினை சேர்ந்த என்ஐஏ அதிகாரிகள் ஒரேநேரத்தில் தீவிர சோதனை மற்றும் விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர்.

முன்னதாக, விசாரணையில் பறிமுதல் செய்யப்பட்ட டெட்டனேட்டர்கள் விருதுநகர் மாவட்டம் நரிக்குடி அருகே உள்ள அகத்தாகுளத்தில் சேலம் ஸ்ரீரெங்கபாளையத்தைச் சேர்ந்த சந்தோஷ்சிவன் என்பவருக்குச் சொந்தமான வெடிமருந்து ஆலையில் தயாரிக்கப்பட்டது தெரியவந்தது.

மேலும், 2028ம் ஆண்டு வரை இந்த ஆலைக்கு உரிமம் உள்ளதும், ஆண்டுக்கு சுமார் 4.50 கோடி எண்ணிக்கையிலான டெட்டனேட்டர்களை தயாரிக்க முடியும் என்பதும், நைட்ரேட் உள்ளிட்ட வெடி பொருள்களை ஆண்டுக்கு சுமார 3 ஆயிரம் மெட்ரிக் டன் வரை உற்பத்தி செய்ய முடியும் திறன் கொண்டது என்பதும் தெரியவந்தது.

அதோடு, அகத்தாகுளத்திலிருந்து தமிழகம், கேரளா, ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களுக்கு டெட்டனேட்டர்கள் அனுப்பி வைக்கப்பட்டது தெரியவந்தது. அதையடுத்து, அகத்தாகுளத்தில் உள்ள வெடிமருந்து ஆலை மற்றும் குடோனில் கேரளாவைச் சேர்ந்த தேசிய புலனய்வு முகமையின் 5 பேர் கொண்ட குழுவினர் இன்று காலை முதல் தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டனர்.

# உப்பட்டியில் இலவச கண் பரிசோதனை மற்றும் கண்ணாடி வழங்கும் சிறப்பு முகாம்





பந்தலூர், மே.31-

நீலகிரி மாவட்டம் பந்தலூர் அருகே உப்பட்டி சிறப்பு நூலகத்தில் கோடைவிழாவை முன்னிட்டு கூடலூர் நுகர்வோர் பாதுகாப்பு மையம், புளுமவுண்டன் நியர் விஷன் கலெக்டிவ், உப்பட்டி சிறப்பு நூலகம் ஆகியவை இணைந்து நடத்திய சிறப்பு இலவச கண் பரிசோதனை மற்றும் கண்ணாடி வழங்கும் முகாம் நடைபெற்றது. முகாமிற்கு சிறப்பு நூலக பொறுப்பு நூலகர் நித்தியகல்யாணி தலைமை தாங்கினார். உப்பட்டி நூலக உதவியாளர் சங்கீதா முன்னிலை வகித்தார். கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் செயலாளர் சிவசுப்பிரமணியம் முகாமை துவக்கி வைத்தார். கண் தொழில்நுட்ப உதவியாளர் பாக்யா முகாமிற்கு வந்திருந்த பொதுமக்கள் அனைவருக்கும் மருத்துவக் கருவிகளைக் கொண்டு கண் பார்வைத் திறன் மற்றும் குறைபாடுகள் பரிசோதனை செய்தார். கிட்டப்பார்வை குறைபாடு உடைய 40 நபர்களுக்குத் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டன.100க்கு மேற்பட்டோர் இந்த முகாமில் இலவச கண் பரிசோதனை செய்து கொண்டனர். 10 பேர் கண் புரை அறுவை சிகிச்சை பரிந்துரை செய்தனர்.இந்த முகாமில் உப்பட்டி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான முதியவர்களும், பொதுமக்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பயனடைந்தனர்.





# செங்குன்றத்தில் டெக்பீ நிறுவனம் திறப்பு விழா

மாதவரம், மே.31-

மாதவரம் தொகுதி செங்குன்றத்தில் மொபைலுக்குத் தேவையான ஏர் பாட்ஸ், சார்ஜர்கள், கேபிள்கள், மொபைல் கேஸ்கள், டெம்பர் கிளாஸ், ஹெட் போன்கள், ஸ்மார்ட் வாட்ச்கள், ஸ்பீக்கர்கள் உள்ளிட்ட பல்வேறு பொருள்களுக்கும் ஒரே இடத்திலும், வாடிக்கையாளர்களுக்கு விருப்பமான டெக்பீ 8வது கிளையாக உரிமையாளர் கார்த்திக் தலைமையில் குடும்பத்தினர் திறந்து வைத்து குத்துவிளக்கேற்றினர். முக்கேஸ் அனைவரையும் வரவேற்றார்.நிகழ்ச்சியில் டெக்பீ நிறுவனத்தின் குடும்பத்தினர்கள், வாடிக்கையாளர்கள் உள்ளிட்டோர் திரளாக கலந்து கொண்டனர். டெக் பீ நிறுவனம் திருவள்ளூர், அம்பத்தூர், பெரம்பூர் உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



# தேனி மாவட்டம் தேவாரம் சாக்குளத்து மெட்டு கேரளாவை இணைக்கும் வனச்சாலை கம்பம் எம் எல் ஏ ஆய்வு

தேனி, மே.31-

தேனி மாவட்டம் கம்பம் சட்டமன்றத் தொகுக்குட்பட்ட தேவாரம் கேரளாவை இணைக்கு சாக்குளத்து மெட்டு சாலையை விரிவுபடுத்திட வேண்டி கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக போராடி வரும் அப்பகுதி மக்களின் நீண்ட கால கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக கம்பம் சட்டமன்ற உறுப்பினர் பி எல் ஏ ஜெகநாத் மிஸ்ரா அவர்கள் அரசு துறை அதிகாரிகள் மற்றும் வனத்துறையினர் உடன் இணைந்து சுமார் 3 கிலோ மீட்டர் நடந்து சென்று ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வில் அவர் செய்தியாளர்களுக்கு தெரிவித்தது. இந்த சாக்குளத்து மெட்டு சாலை என்பது எம் ஜி ஆர் ஆட்சியில் அடிக்கல் நாட்டப்பட்டு அதன் பின்பு கைவிடப்பட்டன. இந்த நிலை அதற்கு பின்பு வந்த அரசு பெயரளவில் ஆய்வு மேற்கொண்டு அதன் பின்பு சாக்கு ளத்து மெட்டு சாலையை இணைக்கும் பணியை தொடரவில்லை. இதனால் அப்பகுதி மக்கள் கேரளாவிற்கு ஏலத் தோட்டப் பணி செல்லல வேண்டும் என்றால் கம்பம் மெட்டு வழியாக 50 கிலோ மீட்டர் தொலைசுற்றித்தான் செல்ல வேண்டும் என்ற சூழ்நிலை உள்ளன. எனவே இப்பகுதி நலன் கருதி இந்த கோரிக்கையை கம்பம் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நான் தமிழக முதல்வர் கவனத்திற்கு எடுத்து சென்று அதற்கான தீர்வை உரிய முறையில் உடனடியா செய்து சாக்குளத்து மெட்டு காயகசாலைப் பணிகள் மேற்கொள்ப்படும் என தெரிவித்தார். மேலும் இந்த சாலை இணைப்பால் தமிழகம் மற்றும் கேரளாவில் தொழில் வர்த்தக வளர்ச்சி ஏற்படும் மருத்துவ வசதிகள் மேப்படும். மேலும் போக்குவரத்து வசதியும் மேம்பாடு அடைந்து கேரளாவிற்கு 5 கிலோ மீட்டர் தொலைவில் விரைவாக சென்று விடலாம். எனவே இந்த நீண்ட கால இப்பகுதி மக்களின் கோரிக்கை வனத்துறையின் மூலம் இணைந்து நிறைவேற்றப்படும்.

# தாம்பரத்தில் நடைபெற்ற இல்ல திருமண வரவேற்பு விழாவில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு விக்கிமராஜா விற்க்கு மாடம்பாக்கம் வியாபாரிகள் நல சங்கம் சார்பில் உற்சாக வரவேற்ப்பு





தாம்பரம், மே.31-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த மாடம்பாக்க பகுதியில்தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட தலைவரும், தாம்பரம் வணிகர் சங்க தலைவருமான எஸ். சேகர் மற்றும் திருமதி பார்வதி சேகர் ஆகியோரின் இல்ல திருமண வரவேற்பு விழா மாடம்பாக்கம் பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.இந்த விழாவில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் எ.எம். விக்கிரமராஜா கலந்து கொண்டு மணமக்கள் ஸ்ரீராம் - ஹரினி பிரித்தி ஆகியோருக்கு திருமண வாழ்த்துகளை தெரிவித்தார்.மேலும் முன்னாள் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா, தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டல குழுத் தலைவர் டி. காமராஜ், மாடம்பாக்கம் வியாபாரிகள் நல சங்க தலைவர் என்.சி. செல்வகுமார், செயலாளர் வின்சன்ட், பொருளாளர் தேவராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.முன்னதாக பேரமைப்பு தலைவர் எ.எம். விக்கிரமராஜாவிற்கு மாடம்பாக்கம் வியாபாரிகள் நல சங்கம் சார்பில் பட்டாசுகள் வெடித்து, பூங்கொத்து வழங்கி உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இவ்விழாவில் வணிகர்கள், சங்க நிர்வாகிகள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.



# உலக பட்டினி தினத்தை முன்னிட்டு தமிழக வெற்றி கழகம் சார்பில் பல இடங்களில் ஏழை எளிய மக்களுக்கு பல்லாவரம் எம்எல்ஏ காமாட்சி உணவு வழங்கினார்

பல்லாவரம், மே.31-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரத்தில் உலக பட்டினி தினத்தை முன்னிட்டு தமிழகம் முழுவதும் , பொதுமக்களுக்கும், ஏழைகளுக்கும் தங்குதடையின்றி உணவு வழங்கத் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவரும், முதலமைச்சருமான ஜோசப் விஜய் உத்தரவிட்டிருந்தார் இந்த நிலையில் பல்லாவரம் தொகுதிக்கு உட்பட்ட பல்லாவரம் அனகாபுத்தூர் பொழிச்சலூர் திரிசூலம் உள்ளிட்ட பலஇடங்களில் சுமார் 2000 பேருக்கு உணவு வழங்கப்பட்டது உணவு வழங்கும் நிகழ்ச்சிக்கு வருகை தந்த பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் காமாட்சி கட்சி நிர்வாகிகள் வரவேற்றனர்இதனை தொடர்ந்து பொது மக்களுக்கு உணவு வழங்கினார்கள் இந்த நிகழ்ச்சியில் தமிழக வெற்றிக்கழக நிர்வாகிகள் மாநில மாவட்ட ஒன்றிய பகுதி கழக நிர்வாகிகள் மகளிர் அணி நிர்வாகிகள் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்







■ சென்னை ஆவடி, பிரதான சாலை திரு சங்கரர் நகரில், அமைந்துள்ள அருள்மிகு சங்கர விநாயகருக்குபுனராவர்த்தன ஜீரணோத்தாரண நூதன பாலமுருகர் மற்றும் ஐயப்ப சுவாமி பிரதிஷ்டை செய்து அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக பெருவிழா நடைபெற்றது. இவ்விழாவில் அருள்மிகு கமலகண்ணி அம்மன் திருக்கோயில் மௌனகுரு, தவத்திரு சச்சிதானந்த சுவாமிகள் கும்பாபிஷேக விழாவில், கலந்துகொண்டு சிறப்பித்தார். ஆலயம் சார்பில் கும்பாபிஷேக விழாவுக்கு வருகை தந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட அனைத்து பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# புதிய நிழற்குடை கட்டிடம் வேண்டி கோரிக்கை

தேனி, மே.31-

தேனி மாவட்டம் பெரியகுளம் ஒன்றியத்துக்கு உட்பட்ட T கல்லுப்பட்டி ஊராட்சியில் அருகில் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்துக்கு எதிர்ப்புறம் உள்ள பேருந்து நிழற்குடை அகற்றி புதிய நிழற்குடை கட்டிட தர மாவட்ட கலெக்டர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். பெரியகுளம் ஒன்றியத்தின் புதிய சட்டமன்ற உறுப்பினராக சபரி ஐயங்கரன் அவர்கள் பொறுப்பேற்ற நிலையில் புதிய ஆட்சி அமைந்துள்ள முதலமைச்சர் இந்த விவகாரத்தை நேரடியாக களம் இறங்கி தங்களது நீண்ட நாள் பிரச்சனை சரி செய்ய தீர்வு காண்பார் என்று அப்பகுதி மக்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் காத்துக் கொண்டிருக்கின்றனர். இந்த ஆபத்தான நிலையில் தரமற்ற நிழற்குடை பள்ளி மாணவர்களுக்கு பயன் இல்லாமல் இருக்கிறது ஜி.கல்லுப்பட்டி ஊராட்சி பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் அதிகமாக கூடும் முக்கிய பகுதியாக சூசையப்பா கிராமம் காலனி விளங்கி வருகிறது இப்பகுதி உள்ள பேருந்து நிழற்குடை தற்போது முற்றிலும் சிதலடைந்து அதன் மேலே உள்ள சுவர்கள் முற்றிலும் பழுதாகி ஆபத்தான நிலையில் உள்ளது. அடுத்த மாதம் பள்ளி திறக்கப்படும் நிலையில் மழை காலம் தொடங்க உள்ள நிலையிலும் இந்த நிழற்குடை பெரும் அச்சுறுத்தலாக மாறி உள்ளது இதனால் பள்ளி செல்லும் மாணவ மாணவிகள் ஆசிரியர்கள் இளைஞர்கள் முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பேருந்துக்காக காத்திருக்க நிழலின்றி வெயிலிலும் மழையிலும் நனைந்தபடி கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். இந்த தீர்வை மாவட்ட ஆட்சியர் அவர்கள் களம் இறங்கி தீர்வு காண கோரிக்கை ஏழை எளிய மக்களின் கோரிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்கள் பள்ளி மாணவர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டும் சூசையப்பா கிராமத்தில் பகுதியில் புதிய நவீன பேருந்து நிழற்குடை அமைத்து தர உத்தரவிட வேண்டும் ஜி.கல்லுப்பட்டி கிராம ஊராட்சி நிர்வாகத்தில் பொறுப்பேற்று அந்தப் பணியை செய்து தர வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கையாகும.



# திருவள்ளூர் மாவட்ட ஆட்சியராக கவிதா ஐஏஎஸ் நியமனம்

■ திருவள்ளூர் மாவட்ட ஆட்சியராக கவிதா ஐஏஎஸ் நியமனம் தமிழ்நாடு அரசு உத்தரவு

# குரோம்பேட்டை லட்சுமிபுரத்தில் உள்ள அருள்தரும் நவசக்தி சுயம்பு துர்கையம்மன் திருக்கோயிலில் திருநெரிய தீந்தமிழ்த் திருக்குட நன்னீராட்டு பெருவிழா நடைபெற்றது





குரோம்பேட்டை, மே.31-

செங்கல்பட்டு மாவட்டம், குரோம்பேட்டை, லட்சுமிபுரத்தில் உள்ள அருள்தரும் நவசக்தி சுயம்பு துர்கையம்மன் திருக்கோயிலில் திருநெரிய தீந்தமிழ்த் திருக்குட நன்னீராட்டு பெருவிழா இன்று நடைபெற்றது, இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் அருள்தரும் நவசக்தி சுயம்பு துர்கையம்மன், மூத்த பிள்ளையார், பாலமுருகன், நாகதுர்கை, அருள்தரும் அம்மா உலகம்மை உடனுரை அருள்மிகு அப்பா உலகநாதர், பைரவர், திருமகள், கலைமகள், திரௌபதி, ஏழு கன்னிமார்கள், நால்வர், தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர், நான்முகன், சண்டிகேஸ்வரர் நவகோள் ஆகிய தெய்வத்திருமேனிகளுக்கு தெய்வத்தமிழ் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நான்கு வேள்விகள் நடத்தி வழிபாடு நடைபெற்றது, முன்னாள் இணை மத்திய அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான முனைவர் சா.ஜெகத்ரட்சகன் தலைமையில் தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ. காமராஜ் முன்னிலையில் நடைபெற்ற இந்த விழாவில் முன்னாள் அமைச்சர் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் தா.மோ.அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார், மேலும் இந்த விழாவில் சுமார் ஐந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர், பின்னர் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# ஸ்ரீ வெள்ளைச்சாமிநெடுங்காட்டு மாரியம்மன் ஆலயத்தில் மஹா கும்பாபிஷேகம் விழா



மாதவரம், மே.31-
மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் நல்லூர் ஊராட்சி சிவந்தி ஆதித்தன் நகரில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ வெள்ளைச்சாமிஸ்ரீ நெடுங்காட்டு மாரியம்மன் ஆலயத்தில் புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண மஹா கும்பாபிஷேகம் விழா ஆலய தர்மகர்த்தா ஆர்.சங்கர் ஆச்சாரி, எஸ்.பாவாடைதுரை ஆச்சாரி, பா.வெள்ளைச்சாமி மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் விக்னேஷ்வரபூஜை, கணபதி ஹோமம், கோபூஜை,தனபூஜை, லட்சுமி ஹோமம், நாடிசந்தானம், அங்குரார்ப்பணம், பிரவேசபலி, யாகசாலை பூஜை, கும்பலங்காரம் போன்ற சிறப்பு பூஜைகள், ஹோமங்கள் நடைபெற்றது. பின்னர் யாகசாலையில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்ட புனிதநீர் கலங்களை மேளதாளத்துடன் கொண்டு சென்று ஆலய விமானம், மூலவர்கள் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு மஹா கும்பாபிஷேகம் செய்யப்பட்டு பின்னர் தீபாராதனை காண்பித்து பக்தர்கள் மீது புனிதநீரை தெளித்தனர். இதனைத்தொடர்ந்து மூலவர் உள்ளிட்ட பரிவார தெய்வங்களுக்கு சிறப்பு அலங்காரம் செய்து தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. இத்திருவிழாவிற்கு ஆலய பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள் உட்பட கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர்.

# வைகாசி விசாக விழா: கோட்டை பெருமாள் சுவாமி சிறப்பு அலங்காரத்தில் வீதி உலா



கிருஷ்ணகிரி, மே.31-
கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினத்தில் உள்ள பிரசித்தி பெற்ற கோட்டை பெருமாள் சுவாமி கோயிலில் வைகாசி விசாகத்தை முன்னிட்டு சிறப்பு வழிபாடுகள் மற்றும் உற்சவ நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன. விழாவையொட்டி கோட்டை பெருமாள் சுவாமிக்கு அதிகாலையில் சிறப்பு திருமஞ்சனம், அபிஷேகம் மற்றும் மகா தீபாராதனை நடைபெற்றது. தொடர்ந்து வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட கோட்டை பெருமாள் சுவாமி, உற்சவர் திருக்கோலத்தில் எழுந்தருளி காவேரிப்பட்டினம் நகரின் முக்கிய வீதிகள் வழியாக வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். வீதி உலாவின் போது பக்தர்கள் "கோவிந்தா... கோவிந்தா..." என்ற பக்தி முழக்கங்களை எழுப்பி சுவாமியை தரிசனம் செய்தனர். பெண்கள் வீதிகளில் கோலமிட்டு, மலர் தூவி சுவாமியை வரவேற்றனர். மேலும் பக்தர்கள் தேங்காய் உடைத்து, கற்பூர ஆரத்தி எடுத்து வழிபட்டனர்.இந்த உற்சவத்தில் காவேரிப்பட்டினம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமியின் அருளைப் பெற்றனர். விழாவிற்கான ஏற்பாடுகளை கோயில் நிர்வாகத்தினர், அறங்காவலர்கள் மற்றும் பக்தர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.



# பழனியில் நவீன உடற்பயிற்சி கூடம் திறப்பு தவெக நிர்வாகிகள் திரளாகப் பங்கேற்பு!

திண்டுக்கல், மே.31-
திண்டுக்கல் மாவட்டம் பழனி ஸிதி ரோட்டில், பொதுமக்களின் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நோக்கில் அதிநவீன வசதிகளுடன் கூடிய புதிய உடற்பயிற்சி கூடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா நேற்று மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது. பொதுமக்கள் மற்றும் இளைஞர்களிடையே உடற்தகுதியை ஊக்குவிக்கும் வகையில் தொடங்கப்பட்டுள்ள இந்த ஜிம்மின் திறப்பு விழாவில், தமிழக வெற்றி கழகத்தின் மாவட்ட, நகர மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் ஏராளமானோர் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விழாவிற்கு வருகை தந்து வாழ்த்திய தவெக நிர்வாகிகளுக்கு, உடற்பயிற்சி கூடத்தின் உரிமையாளர் பொன்னாடை போர்த்தி, தனது நெஞ்சார்ந்த நன்றியையும் மரியாதையையும் தெரிவித்துக் கொண்டார்.

பழனி பகுதியில் உள்ள இளைஞர்களின் நீண்ட நாள் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், பல்வேறு நவீன உடற்பயிற்சி கருவிகளுடன் இந்த கூடம் தொடங்கப்பட்டிருப்பது இப்பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்நிகழ்வில். மூத்த நிர்வாகி மகுடீஸ்வரன். நகர செயலாளர் மிதுன். மாவட்டத் துணைச் செயலாளர் நாகராஜன். மேற்கு ஒன்றிய செயலாளர் ஆசாத். பேரூர் கழக செயலாளர் இஜாஸ் அகமத். இணைச் செயலாளர் பிரபு மாரிமுத்து இக்பால் சங்கர் முகிலன். அருண் கண்ணன். சஞ்சய் சரவணன் . கிருத்திகா வாசகன். கலந்து கொண்டு சிறப்பித்தனர்



■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், வேளாண்மை உழவர் நலத்துறையின் சார்பில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் க.சிவசௌந்திரவல்லி,இ.ஆ.ப., பணி மாறுதலில் செல்ல இருப்பதை முன்னிட்டு, பல்வேறு விவசாய சங்க நிர்வாகிகள் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.

# தேனி மாவட்டம்விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர்ரஞ்ஜீத் சிங் தலைமையில் நடைபெற்றது



தேனி, மே.31-
தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், தலைமையில் நடைபெற்றது. மாவட்டத்தில் மே மாதம் வரை ஆண்டு மழையளவான 276.6 மி.மீக்கு தற்பொழுது வரை 200.03 மி.மீ மழை பெறப்பட்டுள்ளது. இது மே மாதம் வரை ஆண்டு இயல்பான மழையளவில் 76.57 மி.மீ குறைவாகும். மே 2026 மாதத்திற்கான இயல்பு மழையளவான 64.5 மி.மீக்கு தற்பொழுது வரை 88.06 மி.மீ மழை பெறப்பட்டுள்ளது. இது மே மாத இயல்பான மழை அளவை காட்டிலும் 23.56 மி.மீ அதிகமாகும்.தேனி மாவட்டத்தில் நடப்பாண்டு நெல் 380 ஹெக்டர் பரப்பிலும், சிறுதான்யம் 54 ஹெக்டர் பரப்பிலும், பயறு வகைகள் 115 ஹெக்டர் பரப்பிலும், தோட்டக்கலை பயிர்களான பழப்பயிர்கள் 7366 ஹெக்டர் பரப்பிலும், காய்கறி பயிர்கள் 146 ஹெக்டர் பரப்பிலும், மலைத்தோட்ட பயிர்கள் 11044 ஹெக்டர் பரப்பிலும், நறுமணப்பயிர்கள் 1738 ஹெக்டர் பரப்பிலும், மலர்ப்பயிர்கள் 525 ஹெக்டர் பரப்பிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.வேளாண்மை விரிவாக்க மையங்களில் நெல் விதை 71 மெ.டன்னும், சிறுதானியங்கள் 6 மெ.டன்னும், பயறு வகை விதைகள் 9 மெ.டன்னும், எண்ணெய்வித்துப் பயிர் விதைகள் 1.2 மெ.டன்னும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

துவரை பயிரானது நடவு தொழில்நுட்பத்தின் அடிப்படையில் சாகுபடி செய்யும் பொழுது மகசூல் அதிகரிக்கும் என ஆய்வுகள் முடிவுகள் தெரிவிக்கப்பட்டதைத்தொடர்ந்து, நடப்பாண்டு தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தின் கீழ் நடவு தொழில்நுட்பம் மூலமாக துவரை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஹெக்டருக்கு ரூபாய் 10,000 வரை மானியம் வழங்கப்பட உள்ளது. தேனி மாவட்டத்தில் பாரதப் பிரதமரின் கௌரவ நிதி பெரும் திட்டத்தின் கீழ் மொத்தம் உள்ள 26050 பயனாளிகளில் இதுவரை 23,550 பயனாளிகள் மட்டுமே விவசாய அடையாள எண் பெற்றுள்ளார்கள். மீதமுள்ள பிற விவசாயிகளும் கௌரவ நிதித்திட்டத்தின் கீழ் தொடர்ந்து பயனடைய உடனடியாக விவசாய அடையாள எண்ணை பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. விவசாயிகளிடமிருந்து பெறப்படும் அனைத்து மனுக்களுக்கும் 15 நாட்களுக்குள் உரிய தீர்வு காணப்படும் என்றும், டி.ஏ.பி மற்றும் பொட்டாஷ் உரங்கள் அனைத்து கடைகளிலும் இருப்பு வைக்கப்படும் என்றும், உரங்களின் விலை கூடுதலாக விற்றால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வேளாண்மை இணை இயக்குநர் அவர்கள் தெரிவித்தார்.மேலும், இக்கூட்டத்தில் விவசாயிகளிடமிருந்து வரப்பெற்ற மனுக்களுக்கு உரிய பதிலினை விவசாயிகளுக்கு வழங்கிட அனைத்துத்துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர்.ராஜகுமார், மாவ ட்ட வன அலுவலர் ஜி.கிரண், உதவி வன பாதுகாவலர் சாய்சரண் ரெட்டி வேளாண்மை இணை இயக்குநர் சாந்தாமணி, இணைப்பதிவாளர் (கூட்டுறவு) நர்மதா, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ஜெரால்டு அலெக்சாண்டர்மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்) இரா.வளர்மதி, பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள், விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொ



■ திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் மாவட்ட ஆயுதப்படையில் இயங்கி வரும் காவல் பல்பொருள் அங்காடி (Police Canteen) மற்றும் ஆயுத கிடங்குகளை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அக்ஷய் அனில் வாகரே, இ.கா.ப., நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அப்போது காவல் பல்பொருள் அங்காடியில் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகள், பொருட்களின் இருப்பு மற்றும் விநியோக நடைமுறைகள் குறித்து ஆய்வு செய்து, நிர்வாக செயல்பாடுகள் தொடர்பாக அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.மேலும், ஆயுத கிடங்குகளில் பாதுகாப்பு நடைமுறைகள் முறையாக பின்பற்றப்படுகிறதா என்பதையும் ஆய்வு செய்து, ஆயுதங்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் பராமரிப்பு குறித்து தேவையான அறிவுரைகளை வழங்கினார்.இந்த ஆய்வின்போது ஆயுதப்படை காவல் அதிகாரிகள் மற்றும் காவல் பணியாளர்கள் உடனிருந்தனர்.



# சாலை விபத்தில் காயமடைந்தவருக்கு மாவட்ட ஆட்சியர் உதவி

கிருஷ்ணகிரி, மே.31-
கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி அருகே நடந்த சாலை விபத்தில் காயமடைந்த இருசக்கர வாகன ஓட்டுநருக்கு மாவட்ட ஆட்சியர் தினேஷ் குமார் நேரில் முதல் உதவி வழங்கினார். பின்னர் ஆம்புலன்ஸ் மூலம் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தார். இவ்விபத்து தொடர்பாக சூளகிரி காவல் நிலைய போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.




■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், இந்திய அளவில் நடைபெற்ற திறன் போட்டியில் வெற்றி பெற்று உலக அளவில் சீனா, சாங்காய் நகரில் நடைபெறவுள்ள திறன்போட்டியில் கலந்துக்கொள்ளவுள்ள மாணவர் கா.பா.ராகுல், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமாரிடம் வாழ்த்து பெற்றார். உடன் மாவட்ட திறன் பயிற்சி உதவி இயக்குநர் பன்னீர்செல்வம் மற்றும் மாணவரின் பெற்றோர் உள்ளனர்.

# கிருஷ்ணகிரி டோல்கேட்டை இடமாற்றம் செய்யாவிட்டால் சட்ட நடவடிக்கை



கிருஷ்ணகிரி, மே.31-
கிருஷ்ணகிரி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் விதிமுறைகளை மீறி இயங்கும் டோல்கேட்டை இடமாற்றம் செய்யக்கோரி, இளைஞர்கள் சிலர் நேற்று மாவட்ட கலெக்டர் ச.தினேஷ்குமாரிடம் கோரிக்கை மனு அளித்தனர். தொடர்ந்து அவர்கள் நிருபர்களிடம் கூறியதாவது: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மொத்தம், 18 லட்சம் பேர் உள்ளனர். இதில், 10 லட்சத்திற்கும் மேற்பட்டோர் கிருஷ்ணகிரி பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் உள்ள டோல்கேட்டை பயன்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். நகராட்சி எல்லையிலிருந்த, 10 கி.மீ., தொலைவிற்குள் டோல்கேட் அமைக்க கூடாது என்பது விதி. ஆனால், கிருஷ்ணகிரி நகராட்சிக்கு, 800 மீட்டர் தொலைவில் இந்த டோல்கேட் அமைந்துள்ளது. வேப்பனஹள்ளி, ஊத்தங்கரை, பர்கூர், கிருஷ்ணகிரி தொகுதி மக்கள் கிருஷ்ணகிரிக்கு அன்றாடம் வந்து செல்கின்றனர் பல்வேறு அரசு அலுவலகங்களுக்கு செல்வதற்கும், கிருஷ்ணகிரி மக்கள் கலெக்டர் அலுவலகம், அரசு மருத்துவமனைக்கு செல்வதற்கு கூட டோல்கேட்டில் கட்டணம் செலுத்தும் நிலை உள்ளது.__வார இறுதி நாட்களில், 5 கி.மீ., தூரம் வரை வாகன நெரிசலும் ஆம்புலன்ஸ், அவசர சேவை வாகனங்கள் கூட செல்ல முடியாத நிலை உள்ளது. கிருஷ்ணகிரி மக்கள், தங்கள் தினசரி தேவைகள் மற்றும் குறுகிய தூர பயணங்களுக்கு கூட டோல்கேட் கட்டணம் கட்ட வேண்டிய நிலை உள்ளது. எனவே உள்ளூர் வாகனங்களுக்கு டோல்கேட்டில் கட்டண விலக்கு அளிக்க வேண்டும். விதிகளை மீறி இயங்கும் டோல்கேட்டை, 10 கி.மீ., தொலைவில் அமைக்க வேண்டும் என வலியுறுத்தினோம். இதுகுறித்து, ஏற்கனவே நடவடிக்கை எடுத்து வருவதாகவும், சின்னார் பகுதியில் டோல்கேட் அமைக்க மாற்று ஏற்பாடுகள் நடந்து வருவதாகவும் கலெக்டர் தினேஷ்குமார் கூறினார். வரும் டிச.,க்குள் இப்பிரச்னைக்கு தீர்வு காணப்படும் என்றார். அதற்கு மேலும் தீர்வு காணப்படாத பட்சத்தில் சென்னை உயர்நீதிமன்றத்தில் இது குறித்து மனு அளித்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு அவர்கள் கூறினர்._

# ஏழையின் கூக்குரல் மேல்மட்ட செவிகளுக்கு எட்டுமா? பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் கண்ணீருடன் காத்திருப்பு



சிவகங்கை, மே.31-

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டம், நாட்டரசன் கோட்டையில் அமைந்துள்ள கண்ணுடைய நாயகி அம்மன் திருக்கோவிலில் ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் ஸ்ரீ கண்ணுடைய நாயகி அம்மன் வைகாசி விசாக தேர்த்திருவிழா 10 நாட்கள் நடைபெறுகிறது. அதேபோல் பங்குனி மாதத்தில் சேங்கை விட்டு திருவிழாவும், சித்திரை மாதத்தில் ஸ்ரீ ஐயனார் கோவில் புரவி எடுப்பு திருவிழாவும் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், மேனாட்டான் வகையறாவைச் சேர்ந்த அழகர்சாமி, நாராயணன், முத்துக்குமார் உள்ளிட்ட வாரிசுதாரர்கள், தங்களது முன்னோர்களுக்கு பழங்காலத்தில் வழங்கப்பட்ட சிறப்பு செப்புப்பட்டயங்கள் மற்றும் நீதிமன்ற உத்தரவுகளின் அடிப்படையில் தங்களுக்கு உரிய பாரம்பரிய உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என தமிழக முதல்வர், அறநிலையத் துறை இயக்குநர், சிவகங்கை சமஸ்தானம், மாவட்ட ஆட்சியர், காளையார்கோவில் தாசில்தார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு 25.05.2026 அன்று மனு அளித்துள்ளதாக தெரிவித்தனர்.மேலும், கடந்த 300 ஆண்டுகளுக்கு மேலாக தங்களது முன்னோர்களுக்கு வழங்கப்பட்ட இரண்டு செப்புப்பட்டயங்களின் அடிப்படையில் மேளம் கொட்டுதல், காலாஞ்சி வாங்குதல், தேருக்கு தைலக் கொட்டீஸ் கொண்டு செல்லுதல், தேருக்கு கிடாய் வெட்டுதல், கொடிமரத்திற்கு கயிறு திரித்தல், அதற்கான 11 சாதம் பெறுதல், கட்டளை காசு மற்றும் அரிசி வாங்குதல் உள்ளிட்ட கோவில் சார்ந்த பாரம்பரிய பணிகளை தாங்களே செய்து வந்ததாக கூறினர்.ஆனால் கடந்த





இரண்டு ஆண்டுகளாக தங்களை திருவிழா நிகழ்வுகளில் பங்கேற்க அனுமதிக்காமல் புறக்கணித்து வருவதாகவும், குடும்பத்தினரை சமூக ரீதியாக ஒதுக்கி வைத்து திருவிழா நடத்தப்படுவதாகவும் குற்றம்சாட்டினர். மேலும், ஊர் முன் விழுந்து கும்பிட்டு வந்தால்தான் திருவிழாவில் சேர்த்துக் கொள்ளப்படும் என கோவில் நிர்வாக தரப்பில் கூறப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர்கள், "நாங்கள் ஊருடன் இணைந்தே தேர் இழுக்கவும், திருவிழாவில் பங்கேற்கவும் தயாராக இருக்கிறோம். ஆனால் எங்களை திட்டமிட்டு ஒதுக்கி வருகின்றனர். இதற்கு சில நிர்வாக மற்றும் அரசு அலுவலர்களும் உடந்தையாக இருப்பதாக நாங்கள் கருதுகிறோம். இதனால் எங்களுக்கு கிடைக்க வேண்டிய பாரம்பரிய மற்றும் நியாயமான உரிமைகள் மறுக்கப்படுகின்றன. எனவே, தமிழக முதல்வர், மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் தலையிட்டு உரிய விசாரணை நடத்தி எங்கள் உரிமைகளையும் பாதுகாப்பையும் உறுதி செய்ய வேண்டும்" என்று கோரிக்கை விடுத்தனர்.

# சிவகங்கையில் சிறப்பு தொழில் கடன் முகாம்

சிவகங்கை, மே.31-

சிவகங்கைமாவட்டம் புதிய தொழில் முனைவோர் / தொழிலதிபர்கள், தொழில் கடன் மற்றும் மத்திய, மாநில அரசுகளின் மானிய சேவைகளை பெறுவதற்கு ஏதுவாக, குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவன (MSME) தொழில்களுக்கான சிறப்பு தொழில் கடன் முகாமானது, வருகின்ற 01.06.2026 முதல் 30.06.2026 வரை காரைக்குடி தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மாநில அளவில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு நிதிக்கழகம் ஆகும். 1949 ம் ஆண்டு துவங்கப் பெற்ற இக்கழகம் மாநில அரசின் ஆதரவுடன் இதுவரை எண்ணற்ற தொழிற்சாலைகளுக்கு கடனுதவி வழங்கி தொழில் வளர்ச்சிக்கு முன்னோடியாகத் திகழ்கிறது. இக்கழகம் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (MSME) புதிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும், தற்போது இயங்கி கொண்டிருக்கும் தொழிற்சாலைகளை விரிவுபடுத்துவதற்கும், உற்பத்தியை பன்முகப்படுத்துவதற்கும் பல்வேறு சிறப்புத் திட்டங்களின் கீழ் கடனுதவி வழங்கி வருகிறது.தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், காரைக்குடி கிளை அலுவலகத்தில் (முகவரி : எண்.45, எஸ்.பி.கே. வணிக வளாகம், இரண்டாம் தளம், ஸ்ரீ சண்முகராஜா ரோடு, அம்பேத்கார் சிலை அருகில் காரைக்குடி ஸ்ரீ 630 001) குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (MSME) தொழில்களுக்கான சிறப்பு தொழில் கடன் முகாம் 01.06.2026 முதல் 30.06.2026 வரை நடைபெற உள்ளது.

இச்சிறப்பு தொழில் கடன் முகாமில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களின் சிறப்பு அம்சங்கள், தமிழ்நாடு அரசு வழங்கி வரும் மானியங்கள் (மூலதன மானியம் மற்றும் இதர மானியங்கள்), புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) மற்றும் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் (கிகிஙிசிஷி) போன்ற சிறப்பு திட்டங்கள் குறித்த விரிவான விளக்கங்கள் தரப்படுகிறது. தகுதி பெறும் தொழில்களுக்கு தமிழக அரசின் 25% முதலீட்டு மானியம் ரூ.150 இலட்சம் வரை வழங்கப்படும். மேலும் ஏற்கனவே இயங்கி வரும் நிறுவனங்கள் தங்கள் உற்பத்தியை மேம்படுத்தும் பொருட்டு விரிவாக்கம் செய்ய நவீன இயந்திரங்கள் நிறுவும் பட்சத்தில் கூடுதலாக 5% வட்டி மானியமும் வழங்கப்படும். இந்த முகாம் காலத்தில் சமர்ப்பிக்கப்படும் கடன் விண்ணப்பங்களுக்கு ஆய்வு கட்டணத் திலிருந்து முழு விலக்கு அளிக்கப்படும்.எனவே, புதிய தொழில் முனைவோர் / தொழிலதிபர்கள் இம்முகாமினை பயன்படுத்திக் கொண்டு, தொழில் திட்டங்களுடன் வருகை தந்து, தொழில் கடன் மற்றும் மத்திய, மாநில அரசுகளின் மானிய சேவைகளை பயன்படுத்திக் கொள்ளலாம்.கூடுதல் விவரங்களுக்கு, காரைக்குடி கிளையினை 04565233464/81222 என்ற தொலைபேசி எண்ணிலோ அல்லது 79058 94426 78010 என்ற அலைபேசி எண்களிலோ அல்லது கிளை மேலாளர் அவர்களை தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், காரைக்குடி கிளை என்ற முகவரியில் நேரிலோ தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.




■ திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் (TCMS மஞ்சள் குடோன்) வளாகத்தில், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள மாவட்ட இருப்பு அறையை, தலைமை தேர்தல் அலுவலக வாக்குப்பதிவு இயந்திரத்தின் பொறுப்பு அலுவலர் / கூடுதல் தலைமை தேர்தல் அலுவலர் ஸ்ரீதர், மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியர் க.சிவசௌந்திரவல்லி முன்னிலையில் (29.05.2026) அன்று மே 2026 மாதத்திற்கான மாதாந்திர ஆய்வு மேற்கொண்டனர். உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) ஜெய்சங்கர், தேர்தல் வட்டாட்சியர் திருமலை மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.

# 3வது வார்டு பகுதியில் பல ஆண்டுகளாக குடிநீர் தட்டுப்பாடு - மாநகராட்சியின் அலட்சியத்தால் பொதுமக்கள் அவதி!

கன்னியாகுமரி, மே.31-

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட 3வது வார்டு மேலப்பெருவிளை பகுதியில் கடந்த 4 ஆண்டுகளாக கடுமையான குடிநீர் பற்றாக்குறை நிலவி வருகிறது. வீடுகளுக்கான குடிநீர் குழாய்களில் முறையாக தண்ணீர் வராததால் பொதுமக்கள் நாள்தோறும் மிகுந்த சிரமத்துக்கு ஆளாகி வருகின்றனர்.இதுகுறித்து அப்பகுதி மக்கள் பலமுறை மாநகராட்சி அதிகாரிகளிடம் மனு அளித்தும், ஊடகங்கள் மற்றும் பத்திரிகைகளில் தொடர்ந்து செய்திகள் வெளியான பின்னரும் இதுவரை எந்த நிரந்தர நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பொதுமக்களின் அடிப்படை தேவையான குடிநீரையே சரிவர வழங்க முடியாமல் மாநகராட்சி தொடர்ந்து அலட்சியம் காட்டி வருவதாக மக்கள் கடும் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

இரண்டு நாட்களுக்கு ஒருமுறை மட்டுமே குடிநீர் விநியோகம் நடைபெறுகிறது. அதுவும் வெறும் ஒரு மணி நேரம் மட்டுமே தண்ணீர் வருகிறது. அந்த நேரத்திலும் மின்வெட்டு,




மோட்டார் பழுது, குடிநீர் குழாய் உடைப்பு போன்ற காரணங்களை கூறி தண்ணீர் வழங்காமல் அதிகாரிகள் தப்பித்து வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.மற்ற வார்டுகளில் மாதாந்திர குடிநீர் கட்டணம் ரூ.53 மட்டுமே வசூலிக்கப்படும் நிலையில், 3வது வார்டு மக்கள் ரூ.130 வரை கட்டணம் செலுத்தி வருகின்றனர். அதிக கட்டணம் வசூலித்தும் போதிய குடிநீர் வழங்கப்படாததால் மக்கள் கடும் வேதனை மற்றும் ஏமாற்றத்தில் உள்ளனர்.

தற்போது மாநகராட்சி சார்பில் புதிய குடிநீர் இணைப்புகள் தொடர்ந்து அதிகப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் அதற்கேற்ற புதிய நீராதாரம் அல்லது கூடுதல் குடிநீர் வசதி ஏற்படுத்தப்படாததால், ஏற்கனவே இருந்த தண்ணீர் பற்றாக்குறை மேலும் மோசமடைந்து வருகிறது என்று பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

மேலும், ஒரு சில வீடுகளில் குடிநீர் குழாய்களில் வரும் தண்ணீரை சட்டவிரோதமாக மின்மோட்டார் மூலம் உறிஞ்சி எடுத்து பயன்படுத்துவதாகவும், இதனால் அதற்கு அடுத்தடுத்த பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு முறையாக தண்ணீர் செல்லாமல் மக்கள் ஏமாற்றப்படுவதாகவும் அப்பகுதி மக்கள் வேதனை தெரிவிக்கின்றனர். இதுபோன்ற சட்டவிரோத செயல்களை மாநகராட்சி அதிகாரிகள் கண்டுகொள்ளாமல் இருப்பதும் பொதுமக்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

குடிநீர் வராத காலங்களில் அப்பகுதியில் இருந்த பல ஆண்டுகள் பழமையான அரசுக்கு சொந்தமான குடிநீர் கிணற்றை மக்கள் பயன்படுத்தி வந்தனர். ஆனால் சில மாதங்களுக்கு முன்பு அந்த கிணறு சேதமடைந்ததை தொடர்ந்து, "புதிய போர்வெல் அமைத்து தரப்படும்" என்று மாநகராட்சி அதிகாரிகள் உறுதியளித்து அந்த கிணற்றை முழுமையாக மூடி விட்டனர். ஆனால் பல மாதங்கள் கடந்தும் புதிய போர்வெல் அமைக்கும் பணிகள் தொடங்கப்படாததால், மக்கள் தற்போது குடிநீருக்கே தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

வரி வசூலிப்பதில் மட்டும் தீவிரம் காட்டும் மாநகராட்சி, பொதுமக்களின் அடிப்படை தேவையான குடிநீர் பிரச்சனையை தீர்ப்பதில் அலட்சியம் காட்டுவதாக அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டுகின்றனர். பல ஆண்டுகளாக நீடித்து வரும் இந்த பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணாமல் காலம் தாழ்த்தி வருவது பொதுமக்களை கடும் மனவேதனைக்கும் அவதிக்கும் உள்ளாக்கியுள்ளது. எனவே, நாகர்கோவில் மாநகராட்சி நிர்வாகம் உடனடியாக தலையிட்டு 3வது வார்டு மக்களுக்கு சீரான குடிநீர் வசதி ஏற்படுத்தி தர வேண்டும் என்றும், புதிய போர்வெல் அமைக்கும் பணிகளை விரைந்து நிறைவேற்ற வேண்டும் என்றும், சட்டவிரோதமாக மின்மோட்டார் மூலம் தண்ணீர் உறிஞ்சுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் வலியுறுத்தி கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மானாமதுரை இளைஞர் ஆகாஷ் டெலிசன் மரணம் காவல்துறையினரை கைது செய்யக்கோரி தேவேந்திரகுல வேளாளர்கள் பேரமைப்பு பிரம்மாண்ட ஆர்ப்பாட்டம்

திருச்சிராப்பள்ளி. மே.31-

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை கிருஷ்ணராஜபுரம் காலனியைச் சேர்ந்த பட்டதாரி இளைஞர் ஆகாஷ் டெலிசன் (வயது 26) காவல் சித்திரவதையால் மரணமடைந்த விவகாரத்தில், தொடர்புடைய காவல்துறையினரை உடனடியாகக் கைது செய்ய வலியுறுத்தி திருச்சியில் நேற்று பிரம்மாண்ட கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தேவேந்திரகுல வேளாளர்கள் பேரமைப்பு தமிழ்நாடு அமைப்பின் சார்பில் இந்த ஆர்ப்பாட்டம் ஒருங்கிணைக்கப்பட்டது.சம்பவத்தின் பின்னணி:கடந்த மார்ச் மாதம் 8ஆம் தேதி, காவல்துறையினரால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட மானாமதுரை இளைஞர் ஆகாஷ் டெலிசன்




பரிதாபமாக உயிரிழந்தார். இந்தச் சம்பவம் தொடர்பாக கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டு, தற்போது சிபிசிஜடி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.இருப்பினும், ஆகாஷ் டெலிசனின் மரணத்திற்குக் காரணமான காவல் துறை அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுத்து அவர்களைக் கைது செய்யும் வரை, அவரது உடலை வாங்க மறுத்து உறவினர்களும் பொதுமக்களும் 80 நாட்களுக்கும் மேலாகத் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தலைமை மற்றும் முன்னிலை: நேற்று நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டத்திற்குத் தேவேந்திரகுல வேளாளர்கள் பேரவைத் தலைவர் அய்யப்பன் தலைமை தாங்கினார். 'மக்கள் தமிழகம்' கட்சியின் தலைவர் நிலவழகன் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு முன்னிலை வகித்தார். மேலும், முக்கிய நிர்வாகிகளான பாவேந்தர், விஜய், கோபி உட்படப் பலர் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன கோஷங்களை எழுப்பினர். ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடம்:திருச்சிராப்பள்ளி, மரக்கடை அருகில் உள்ள இராமகிருஷ்ணா பாலம் பகுதியில் நேற்று காலை 10.00 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஒட்டுமொத்தமாகத் திரண்ட பொதுமக்கள், தமிழக அரசும் சிபிசிஜடி காவல் துறையும் உடனடியாகத் தலையிட்டு மரணத்திற்குக் காரணமான அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161